Eastern University, Sri Lanka

Faculty of Commerce and Management

External Degree

Part I Examination in Business Administration - 2010 / 2011 (September 2015) (Repeat)

EXB 202 Advanced Financial Accounting

12 OCT 2015

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது.** **நேரம்: மூன்று மணித்தியாலங்கள்**

BKL plc கம்பனியானது ஒவ்வொன்றும் ரூ.100 விலையான 10,000 புதிய சாதாரண பங்குகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை பொதுமக்களிடமிருந்து கோரியது. இப் பங்கு வழங்கலுக்கான பணம் பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்பட்டது:

| | பங்கு ஒன்றுக்கு ரூபா |
|---|---|
| விண்ணப்பத்தில் | 25 |
| ஒதுக்கத்தில் | 40 |
| அழைப்பில் | 35 |
| | 100 |

12,500 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. ஆயினும் 3 பங்குகளுக்கு விண்ணப்பத்தோருக்கு 2 பங்குகளை ஒதுக்குதல் என்னும் விகிசார அடிப்படையில் பங்குகளுக்கான ஒதுக்கல் செய்யப்பட்டன.

மேற்கூறப்பட்ட ஒழுங்கின் படி பங்குகளுக்கான ஒதுக்கீடும் அழைப்பும் மேற்கொள்ளப்பட்ட போது தயா எனும் விண்ணப்பதாரி அவருக்கு ஒதுக்கப்பட்ட 180 பங்குகளுக்குரிய ஒதுக்கல் பணத்தை செலுத்தத் தவறி விட்டார். அவரது பங்குகள் யாவும் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் அழைப்பு விடப்பட்ட போது கதிர் எனும் விண்ணப்பதாரி அவர் விண்ணப்பித்திருந்த 60 பங்குகளுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளுக்குரிய அழைப்புப் பணத்தை செலுத்தத் தவறினார். அவரது பங்குகளும் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் கதிரின் சகல பங்குகளும் உட்பட 200 பங்குகள் பங்கு ஒன்று ரூ.100 விலையில் முற்றாகச் செலுத்த வேண்டியதாகவும் இதற்கான பணத்தை உரிய நேரத்தில் பெறும் விதமாகவும் மீள வழங்கல் செய்யப்பட்டன. ஏனைய பங்குகளுக்குரிய பணமும் மீள வழங்கப்பட்ட பங்குகளுக்குரிய பணமும் உரிய நேரத்தில் பெறப்பட்டன.

**வேண்டப்படுவது.**

(i) தேவையான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக (காசு உட்பட)

(ii) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குக

**(20 புள்ளிகள்)**

**02.** 31.12.2014 இல் உள்ளவாறான DPL plc கம்பனியின் ஐந்தொகை பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | ரூபா | சொத்துக்கள் | ரூபா |
|---|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 ) | 500,000 | காணி கட்டடம் | 500,00 |
| 8% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10) | 400,000 | தளபாடமும் பொருத்திகளும் | 150,0 |
| இலாப நட்டக் கணக்கு | 200,000 | முதலீடுகள் | 200,0 |
| பொது ஒதுக்கம் | 150,000 | இருப்புக்கள் | 120,0 |
| கடன்கொடுத்தோர் | 118,000 | கடன்பட்டோர் | 80,0 |
| முன்னுரிமை பங்கிலாப சென்மதி | 32,000 | காசும் வங்கியும் | 350,0 |
| | **1400,000** | | **1400,0** |

8% மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகள் அனைத்தும் 01.01.2015 இல் மீட்கப்பட்ட ரூ.100,000 பெறுமதியான முதலீடுகள் கொள்விலையுடன் 20% கூட்டிய விலைய விற்கப்பட்டன. இலாப நட்டக் கணக்கில் ரூ.100,000 மீதி இருக்கத்தக்கதாக மீட்புக் கிடைக்கத்தக்க வருமான ஒதுக்கங்களை எல்லாவற்றையும் பயன்படுத்திய பின்னர் மிகுதிக் போதுமான அளவு புதிய சாதாரண பங்குகள் ரூ.10 விலையில் வழங்கப்பட்டன. முன்னுரி பங்கிலாப சென்மதி உட்பட முன்னுரிமைப் பங்குதாரருக்குரிய கொடுப்பனவுகள் யா முறையாக மேற்கொள்ளப்பட்டன.

**வேண்டப்படுவது :**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

(அ) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகள்

(ஆ) முன்னுரிமை பங்குகள் மீட்பின் பின்னரான ஐந்தொகை

**(20 புள்ளிக**

P கம்பனியானது Q கம்பனியின் 70% சாதாரண பங்குகளை 01.07.2014 இல் ரூ.250000 விற்கு கொள்வனவு செய்தது. 31.12.2014 இல் உள்ளவாறான அக்கம்பனிகளின் ஐந்தொகைகள் பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | P கம்பனி | Q கம்பனி |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (பங்கு ஒன்று ரூ.10) | 500,000 | 300,000 |
| பொது ஒதுக்கம் | 150,000 | 150,000 |
| இலாப நட்டக் கணக்கு | 250,000 | 100,000 |
| கடன்கொடுத்தோர் | 100,000 | 50,000 |
| | **1000,000** | **600,000** |
| **சொத்துக்கள்** | | |
| காணி கட்டடம் | 400,000 | 350,000 |
| பொறி இயந்திரம் | 150,000 | 90,000 |
| Q கம்பனியின் 21000 சாதாரண பங்குகள் மீதான முதலீடு | 300,000 | - |
| இருப்புக்கள் | 80,000 | 60,000 |
| கடன்பட்டோர் | 40,000 | 40,000 |
| வங்கி மீதி | 30,000 | 60,000 |
| | **1000,000** | **600,000** |

**மேலதிக தகவல்கள் :**

i) 01.01.2014 இல் Q கம்பனியின் பொது ஒதுக்கக் கணக்கில் ரூ.60000 வும் இலாபநட்டக் கணக்கில் ரூ.30000 செலவு மீதியும் காணப்பட்டன. Q கம்பனியின் இலாபங்கள் 2014 இல் ஆண்டு முழுவதும் சமனாக உழைக்கப்பட்டிருந்தன.

ii) Q கம்பனியின் கடன்பட்டோர் P கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூ.15000 வை உள்ளடக்கியுள்ளது.

iii) கொள்வனவுத் திகதியில் Q கம்பனியின் காணி கட்டடம் ரூ.340000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

**வேண்டப்படுவது :**

31.12.2014 இல் உள்ளவாறான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**

**04.** HL கம்பனியானது SK மோட்டர்ஸ் கம்பனியிடமிருந்து வாடகைக் கொள்வனவு முறையி கீழ் வடி வண்டி ஒன்றை 01.01.2012 இல் கொள்வனவு செய்தது. வாடகைக் கொள்வன ஒப்பந்தத்தின் படி ரூ.207,000 உடன் காசாசையும் 31.12.2012 இலிருந்து தொடங்கு ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ரூ.399,300 வருடாந்த தவணைக் கட்டணத்தை மூன் ஆண்டுகளுக்கு செலுத்துதல் வேண்டும். வாடகைக் கொள்வனவு வட்டி வீதம் ஆண்டுக் 10% ஆகும். இவ்வட்டி வருடாந்த தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கியுள்ளது.

**வேண்டப்படுவது :**

1. வாடகைக் கொள்வனவு மொத்த வட்டியையும் வருடாந்த வட்டியையும் கணிக்க.
2. வடி வண்டியின் காசு விலையைக் கணிக்க.
3. வடி வண்டியின் வாடகைக் கொள்வனவு விலை என்ன?
4. 2012, 2013, 2014 ஆண்டுகளுக்கு வாடகை கொள்வனவாளரின் ஏட்டில் க விலையைப் பதியும் முறையில் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக:

    i. வடி வண்டி கணக்கு
    ii. SK கம்பனிக் கணக்கு
    iii. வாடகை கொள்வனவு வட்டிக்கணக்கு

**(20 புள்ளிக**

GTS plc கம்பனியின் 31.12.2014 இல் முடிவுற்ற ஆண்டுக்கான சில நிதித்தகவல்கள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| காசு விற்பனைகள் | 250,000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | 300,000 |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்திய காசு | 225,000 |
| முதலீட்டு வருமானம் | 36,000 |
| நிர்வாகச் செலவுகள் | 85,000 |
| விற்பனை விநியோகச் செலவுகள் | 65,000 |
| வட்டி செலுத்தியது | 15,000 |
| வரி செலுத்தியது | 40,000 |
| தளபாடம் கொள்வனவு | 52,000 |
| முதலீட்டு விற்பனை | 35,600 |
| வங்கிக் கடன் பெற்றது | 100,000 |
| பங்கிலாபம் செலுத்தியது | 25,500 |
| காசு மற்றும் வங்கி மீதி 01.01.2014 இல் | 26,500 |
| காசு மற்றும் வங்கி மீதி 31.12.2014 இல் | ? |

**வேண்டப்படுவது :**

GTS plc கம்பனியின் 31.12.2014 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்றினை நேர்முறையில் தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**